# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 67/ந/2025
நாள்: 04.07.2025

திரு.S.அன்பழகன்,
துறையூர். திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 22.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2025 அன்று பெறப்பட்டு 67/ந/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவர் தனது 22.01.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“துறையூர் பெரம்பலூர் ஒரு வழிப்பாதை சாலையில் பெரிய கடை வீதியில் இயங்கி வரும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடம் 100 சதுர அடி நீளத்தில் 20 சதுர அடி அகலத்தில் 15000 சதுர அடி பரப்பளவுடன் அதுவும் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து வாகன நிறுத்தும் இடவசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் சிறிதும் இடம் விடாமல் எதிர்பாராமல் ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் ஏராளமான பொதுமக்கள் உயிர் இழக்கும் அபாயம் ஏற்படும் என்பதை விளக்கியும் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தால் ரேணுகா சில்க்ஸ் ஜவுளி கடைக்கு வரும் பொதுமக்கள் சாலையில் இரண்டு புறமும் வாகனத்தை நிறுத்தி விடுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை விளக்கியும் சட்ட விரோதமாக செயல்படும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தை சீல் வைத்து தடை செய்யுமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு 05.12.2024–ல் புகார் அனுப்பி அதனை அவர் 06.12.2024–ல்

பெற்றுக்கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநருக்கும் அனுப்பினேன்.

நான் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு அனுப்பிய புகாரின் மீது ரேணுகா சில்க்ஸ் இடத்தினை நேரடி கள ஆய்வு செய்து விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதன் விவரத்தினை எனக்கும் மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கும் தெரிவிக்குமாறும் துறையூர் நகராட்சி ஆணையருக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ந.க.எண்.4006/2023/அ4 நாள்.17.12.2024 கடிதம் மூலம் உத்தரவு பிறப்பித்து அதன் நகலை எனக்கு அனுப்பினார்.

நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 05.12.2024–ல் அனுப்பிய புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குநர் வழங்கிய அறிவுரையை துறையூர் நகராட்சி ஆணையர் பின்பற்றவில்லை என்பதை சுட்டிக்காட்டியதோடு, விதிமீறி செயல்படும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடம் 10 வருடங்களுக்கு மேல் நகராட்சியின் எவ்வித கண்காணிப்பு, ஆய்விற்கு உள்ளாகாமல் இயங்கி வந்துள்ளதை சுட்டிக்காட்டி, உரிய நேரத்தில் நகராட்சி ஆணையர்கள் ஆய்வு, சோதனை செய்திருந்தால் விதிமீறல்களை தடுத்திருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டி இருந்தேன். மேலும் விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் எடுத்த அனைத்து நடவடிக்கை முழுவதையும் சுட்டிக்காட்டியதோடு, மாண்புமிகு உயர்நீதிமன்றத்தை விட தன்னை ஆணையர் சர்வ வல்லமை படைத்தவராக கருதும் போக்கை மாற்றிக்கொண்டு ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடம் மரியாதையும், பயமும் கொண்டு சட்டப்படி உயர்நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றி விதிமுறைகளை முற்றிலும் மீறி (பார்க்கிங் வசதி இல்லாமல்) செயல்படும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தை தடை செய்யுமாறு நான் புகார் கொடுத்தும், மண்டல இயக்குநர் உத்தரவு பிறப்பித்தும், இதுவரை விதிமீறிய ரேணுகா சில்க்ஸ் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே நான் புகாரில் குறிப்பிட்டதுபோல் துறையூர் நகராட்சி ஆணையர் அவர்கள் தன்னை உயர்நீதிமன்றத்தை விட சர்வ வல்லமை படைத்தவராக கருதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கே சவால் விடும் விதமாகத்தான் இதுவரை விதிமீறிய ரேணுகா சில்க்ஸ் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது நன்கு விளங்குகின்றது. மேலும் நான் என் புகாரிலேயே பொதுமக்கள் கொடுக்கும் புகார் மனு தொடர்பாக தலைமை செயலாளர் அவர்கள் கூறிய அறிவுறுத்தல்படி என் புகார் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி அது சம்மந்தமாக தலைமை செயலாளர் அனுப்பிய சுற்றறிக்கையை இணைத்து அனுப்பியும், தலைமை செயலாளரின் உத்தரவையும், ஆணையர் மதிக்கவில்லை என்பது தெரிகிறது.

எனவே, பசுவின் கன்றுக்காக தன் மகனை கொன்ற மனுநீதிச்சோழன், தவறான தீர்ப்பு வழங்கியதால் தன் உயிரை விட்ட பாண்டி மன்னன் நெடுஞ்செழியன் வாழ்ந்த நீதிக்குப் பேர்போன வரலாறு கொண்ட நாட்டில் வசிக்கும் மாண்புமிகு சத்தியத்தின் வழியில் நேர்மையாக செயல்படும் மதிப்புமிக்க மேலான தாங்கள் தவறு செய்த நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுத்து, விதிமீறி செயல்படும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தை சீல்வைத்து தடை செய்யுமாறு பொதுநலன் கருதி பணிவோடு தாழ்மையுடன், கீழ்படிந்து கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.02.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.4551/2024/எப்1, நாள்.02.04.2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"விசாரணையில் மேற்படி ரேணுகா சில்க்ஸ் ஜவுளி நிறுவனம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா சுமார் 1696 சதுர அடி பரப்பளவில் மதராஸ் ஓடு (Madras Terrace) அமையப்பெற்ற ஜவுளிக்கடை இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் சுமார் 1120 சதுர அடி பரப்பளவில் AC sheet roof அமையப்பெற்ற குடோன் இயங்கி வருகிறது. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 4352 சதுர அடியாகும். தரைத்தளம், மற்றும் முதல் தளம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரும் இரண்டாம் தளம் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னரும் கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது. அதன்பின்னர் எவ்விதமான கட்டிடப்பணிகளோ அல்லது மராமத்து பணிகளோ நடைபெறவில்லை என விசாரணையில் தெரிய வருகிறது.

கட்டிட உரிமையாளர் திரு.எஸ்.விஜயகுமார் தனது மனுவில் துறையூர் நகராட்சி உருவாகுவதற்கு முன்னதாகவே 1950–ம் ஆண்டில் கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதாகவும் மூன்றாம் தலைமுறையான சொத்து எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், 60 ஆண்டுகளுக்கும் மேலாவதால் கட்டிட வரைபடம் தங்களிடம் இல்லை என தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் கட்டிடத்தில் சீர்திருத்தம் செய்யப்படும் சமயத்தில் நகராட்சியின் அனுமதி பெற்றுக்கொள்கிறோம் என்றும் திரு.எஸ்.விஜயகுமார் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

வரிவிதிப்பு எண்கள். 087/002/900634, 087/002/900635 மற்றும் 087/011/900647 ஆகிய மூன்று வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு எண்.087/011/900076 (பழைய இணைப்பு எண்.087/484)–ல் குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. ரேணுகா சில்க்ஸ் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வாகன நிறுத்துமிட வசதிக்காக கடையிலிருந்து சுமார் 300 அடி தூரத்திற்குள் கீழரத வீதியில் பாரதி தியேட்டர் எதிர்புறத்தில் சுமார் 3000 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்து வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கட்டிடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருப்பின் அளந்து குறியீடு செய்து தருமாறு கேட்டு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர், எதிர்மனுதாரராகிய துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரராகிய ரேணுகா சில்க்ஸ் உரிமையாளர் திரு.எஸ்.விஜயகுமார் ஆகியோரை 28.04.2025 அன்று இம்முமைன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணையில் நேரில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 16.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரராகிய திரு.எஸ். அன்பழகன் 28.04.2025 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் பெரம்பலூர் ஒரு வழிப்பாதை சாலையில் பெரிய கடை வீதியில் இயங்கி வரும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடம் 100 சதுர அடி நீளத்தில் 15 மீட்டர் உயரத்திற்கு சுமார் 15000 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடமானது அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து, வாகன நிறுத்த இடவசதியின்றி, கட்டிடத்தை சுற்றி நான்கு புறமும் இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது. இதனால் தீ விபத்து ஏற்பட்டால் ஏராளமான பொதுமக்கள் உயிர் இழக்கும் அபாயம் ஏற்படும் நிலை உள்ளது. மேலும், இக்கட்டிடத்தில் செயல்பட்டு வரும் ரேணுகா சில்க்ஸ் ஜவுளி கடைக்கு வரும் பொதுமக்கள் சாலையில் இருபுறமும் வாகனங்களை நிறுத்தி விடுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள்.

இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து அமைக்கப்பட்ட பார்க்கிங் வசதி ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தின் எதிர்புறத்தில் அருகில் அமைக்கப்படாததால், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள்.

விதிமுறைகளை மீறி பார்க்கிங் வசதி இல்லாமல் செயல்படும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தை தடை செய்யுமாறு புகார் கொடுத்தும், மண்டல இயக்குநர் உத்தரவு பிறப்பித்தும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. விதிமீறிய ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தை சீல்வைத்து தடை செய்யுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்” என பதிவு செய்துள்ளார்.

6. எதிர்மனுதாரராகிய துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 28.04.2025 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“மனுதாரரால் புகார் அளிக்கப்பட்ட ரேணுகா சில்க்ஸ் ஜவுளி நிறுவனம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா சுமார் 1696 சதுர அடி பரப்பளவில் மதராஸ் ஓடு (Madras Terrace) அமையப்பெற்ற ஜவுளிக்கடை இயங்கி வருகிறது.

இரண்டாம் தளத்தில் சுமார் 1120 சதுர அடி பரப்பளவில் AC sheet roof அமையப்பெற்ற குடோன் இயங்கி வருகிறது. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 4352 சதுர அடியாகும். தரைத்தளம் மற்றும் முதல் தளம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரும், இரண்டாம் தளம் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னரும் கட்டப்பட்டுள்ளது. அதன்பின்னர் எந்தவிதமான கட்டிடப்பணிகளோ அல்லது மராமத்து பணிகளோ நடைபெறவில்லை.

கட்டிட உரிமையாளர் திரு.எஸ்.விஜயகுமார் என்பவரிடம் விசாரணை மேற்கொண்டதில், துறையூர் நகராட்சி உருவாகுவதற்கு முன்னதாகவே 1950ம் ஆண்டில் கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதாகவும், மூன்றாம் தலைமுறையான சொத்து எனவும், 60 ஆண்டுகளுக்கும் மேலாவதால் கட்டிட வரைபடம் தங்களிடம் இல்லை எனவும், இனி வரும் காலங்களில் கட்டிடத்தில் சீர்திருத்தம் செய்யப்படும் சமயத்தில் நகராட்சியின் அனுமதி பெற்றுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்.

சொத்துவரி, குடிநீர் குழாய் இணைப்பு, குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. ரேணுகா சில்க்ஸ் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வாகன நிறுத்துமிடம் வசதிக்காக கடையிலிருந்து சுமார் 300 அடி தூரத்திற்குள் கீழரத வீதியில் பாரதி தியேட்டர் எதிர்புறத்தில் சுமார் 3000 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்து வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கட்டிடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருப்பின் அளந்து குறியீடு செய்து தருமாறு கேட்டு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவரிடம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்" என பதிவு செய்துள்ளனர்.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான ரேணுகா சில்க்ஸ் உரிமையாளர் திரு.எஸ்.விஜயகுமார் 28.04.2025 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

"ரேணுகா சில்க்ஸ் செயல்பட்டு வரும் கட்டிடமானது துறையூர் நகராட்சி உருவாகுவதற்கு முன்னதாகவே 1950ம் ஆண்டில் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் தலைமுறையான சொத்து. இந்நிறுவனம் சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தில் எந்தவிதமான கட்டிடப்பணிகளோ அல்லது மராமத்து பணிகளோ நடைபெறவில்லை.

சொத்துவரி, குடிநீர் குழாய் இணைப்பு, குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. ரேணுகா சில்க்ஸ் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வாகன நிறுத்துமிடம் வசதிக்காக கடையிலிருந்து சுமார் 300 அடி தூரத்திற்குள் கீழரத வீதியில் பாரதி அரங்கம் எதிர்புறத்தில் சுமார் 3000 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்து வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வாடிக்கையாளர்களின் வாகனங்களை கொண்டு சென்று வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்துவதற்கும், திரும்ப கொண்டு வருவதற்கும் ஓட்டுநர்களை பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவரிடம் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்" என பதிவு செய்துள்ளார்.

8. மனுதாரரது புகார் மனு, அவரது வாக்குமூலம், துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் துறையூர் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலங்கள், இரண்டாம் எதிர்மனுதாரரான ரேணுகா சில்க்ஸ் உரிமையாளர் திரு.எஸ்.விஜயகுமார் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

துறையூர் பெரம்பலூர் ஒரு வழிப்பாதை சாலையில் பெரிய கடை வீதியில் இயங்கி வரும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடம் 100 சதுர அடி நீளத்தில் 20 சதுர அடி அகலத்தில் 15000 சதுர அடி பரப்பளவுடன் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து வாகன நிறுத்தும் இடவசதிக்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் இடம் விடாமல், எதிர்பாராமல் ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் ஏராளமான பொதுமக்கள் உயிர் இழக்கும் அபாயம் ஏற்படும் என்பதை விளக்கியும் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தால் ரேணுகா சில்க்ஸ் ஜவுளி கடைக்கு வரும் பொதுமக்கள் சாலையில் இரண்டு புறமும் வாகனத்தை நிறுத்தி விடுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை விளக்கியும் சட்ட விரோதமாக

செயல்படும் ரேணுகா சில்க்ஸ் கட்டிடத்தை சீல் வைத்து தடை செய்யுமாறு துறையூர் நகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருக்கு மனு அளித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது.

ரேணுகா சில்க்ஸ் ஜவுளி நிறுவனம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதும், மேற்படி நிறுவனம் அமைந்திருக்கும் கட்டடம் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா சுமார் 1696 சதுர அடி பரப்பளவில் மதராஸ் ஒடு (Madras Terrace) அமையப்பெற்றதும், இரண்டாம் தளத்தில் சுமார் 1120 சதுர அடி பரப்பளவில் AC sheet roof அமையப்பெற்ற குடோன் இயங்கி வருவதும் கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 4352 சதுர அடி என்பதும், தரைத்தளம், மற்றும் முதல் தளம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரும் இரண்டாம் தளம் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னரும் கட்டப்பட்டுள்ளது விசாரணையில் தெரிய வந்தது என்பதும் அதன்பின்னர் எவ்விதமான கட்டிடப்பணிகளோ அல்லது மராமத்து பணிகளோ நடைபெறவில்லை என்பதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக தெரிய வருகிறது.

ரேணுகா சில்க்ஸ் செயல்பட்டு வரும் கட்டிடமானது துறையூர் நகராட்சி உருவாகுவதற்கு முன்னதாகவே 1950 ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது என்பதும், இது மூன்றாம் தலைமுறை சொத்து என்பதும், இந்நிறுவனம் சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதும், இக்கட்டிடத்தில் எந்தவிதமான கட்டிடப்பணிகளோ அல்லது மராமத்து பணிகளோ நடைபெறவில்லை என்பதும், சொத்துவரி, குடிநீர் குழாய் இணைப்பு, குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதும் ரேணுகா சில்க்ஸ் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வாகன நிறுத்துமிடம் வசதிக்காக கடையிலிருந்து சுமார் 300 அடி தூரத்திற்குள் கீழரத வீதியில் பாரதி அரங்கம் எதிர்புறத்தில் சுமார் 3000 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்து வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வருவதும், வாடிக்கையாளர்களின் வாகனங்களை கொண்டு சென்று வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்துவதற்கும், திரும்ப கொண்டு வருவதற்கும் ஓட்டுநர்களை பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளதும் ரேணுகா சில்க்ஸ் உரிமையாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் ரேணுகா சில்க்ஸ் நிறுவனம் அரசு விதிமுறைகளின்படி அமைந்துள்ளதா என்பதை கள ஆய்வு செய்து, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம்,1971ன்/ மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம்,1998–ன் கீழ் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறையூர் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் வட்டாட்சியரிடமிருந்து ஆக்கிரமிப்பு குறித்தான அறிக்கை விரைந்து பெற்று அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை அரசு விதிகளுக்கு உட்பட்டும், மாண்பமை உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களின்படியும் மேற்கொள்ளுமாறு துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்த முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஜூலை 04 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.S.அன்பழகன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு, துறையூர் அஞ்சல் & வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்
துறையூர் நகராட்சி, துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர்/இணை இயக்குநர்
Nodal Officer,
நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்